විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

පෙලේරුම් කාර්යාලය, මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓய்வு/சுற்றுநிருபம்/2011 දිනය / திகதி / Date 20-07-2011

**ஓய்வூதியச் சுற்றுநிருபம்: 02/2011 (திருத்தம் 01)**

மாநகர சபை – நகராட்சி ஆணையாளர்கள்,
நகர சபை – நகராட்சிச் செயலாளர்கள்,
பிரதேச சபை – பிரதேச சபைச் செயலாளர்கள்,

**மாகாண அரச சேவையினுல் உள்ளீர்க்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஓய்வூதிய / விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய உரித்தினை வழங்குதல்**

24-02-2011 திகதி கொண்டு என்னால் வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றுநிருபம் 02/2011 இன் ஒழுங்கு விதிகள் தொடர்பில் கீழ்வரும் அறிவுறுத்தல்கள் தொடர்ந்தும் வெளியிடப்படுகின்றன.

**01. உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமை புரியும் ஊழியர் சேமலாப நிதிய நியமனதாரர்கள் தொடர்பில் செயலாற்றுதல்.**

மேற்குறித்த சுற்றுநிருபத்தின் 4.2 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் தொடர்ந்தும் கீழ்வருமாறு தெளிவுபடுத்தப்படுகின்றன.

1.1 ஊழியர் சேமலாப நிதிய உரித்துடைய நியமனங்கள், ஓய்வூதிய உரித்துடைய நியமனங்களாகக் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. ஆதலால் அச்சேவைக்காலத்தினை ஓய்வூதியத்திற்காகக் கூட்டுச்சேர்த்தல் கூடாது.

1.2 ஊழியர் சேமலாப நிதிய உரித்துடைய நியமனதாரிகளைப் பிற்காலத்தில் மாகாண அரச சேவையினுள் உள்ளீர்த்து முறையான, நிரந்தர ஓய்வூதியம் கொண்ட நியமனமொன்று வழங்கப்பட்டிருப்பின் மட்டும் ஊழியர் சேமலாப நிதியம் கொண்ட சேவைக்காலத்தினை ஓய்வூதியத்துடன் கூட்டுச் சேர்க்க அனுமதி வழங்கலாம். அவ்வாறு செய்ய இயல்வது, குறித்த காலத்திற்கான விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புப் பணத்தினை அறவிடுதல் மற்றும் சபையின் பங்களிப்பினை ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செழுத்துவதன் மூலம் மட்டுமாகும். அவ்வாறே அது போன்றதோர் சேவைக்காலத்தினைக் கூட்டுச் சேர்க்க முன்னர் என்னிடத்தே அதற்கான எழுத்து மூல அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.


| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone |
|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 |

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk

1.3 ஊழியர் சேமலாப நிதிய சபைப் பங்களிப்பினை, சபையினால் மீளப்பெற்றிருப்பின் குறித்த தொகைகளை இத்திணைக்களத்திற்குப் பாய்ச்சுதல் வேண்டும். சபைப் பங்களிப்பினை ஊழியருக்கு வழங்கியிருப்பின் அவற்றினை அறவிட்டு என்னிடத்தே அனுப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இது வரையில் சபைப் பங்களிப்புப் பணத்தினைப் பெற்றுள்ள ஊழியர்களை ஓய்வு பெறச் செய்திருப்பின் அவர்களின் ஓய்வூதியத்திலிருந்து அதனை அறவிடுவதற்காக அது பற்றியதோர் விரிவான அறிக்கையினை என்னிடத்தே சமர்ப்பித்தல் வேண்டும்.

1.4 உள்ளூராட்சி நிறுவனங்களில் அமைய, தற்காலிக, பதில், நாளாந்தச் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு ஓய்வூதியச் சுற்றுநிருபம் 04/2010 இன் படி அரச சேவை சேமலாப நிதிய நியமனங்களை வழங்க முடியுமாதலால், ஊழியர் சேமலாப நிதிய நியமனங்களுக்குப் பதிலாக அரச சேவை சேமலாப நிதிய உரித்துடைய நியமனங்களை வழங்க உள்ளூராட்சி நிறுவனங்கள் கருத்தாயிருத்தல் வேண்டும்.

**02. உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியப் பங்களிப்புப் பணத்தினை முறையாகச் செழுத்துதல்.**

மாகாண அரச சேவையினுள் உள்ளீர்க்கப்படாத, தற்போது ஓய்வூதியம் பெறும் உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்காக வேண்டி ஒழுங்கான முறையில் பங்களிப்புப் பணத்தினைப் பாய்ச்சுவதற்கான ஒழுங்குவிதிகள் 24-02-2011 திகதி கொண்ட ஓய்வூதியத் திணைக்களச் சுற்றுநிருபம் 02/2011 இன் 4.3 இன் கீழ் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

2.1 அதன்படி அவ் அவ் உள்ளூராட்சி நிறுவனங்களினால், குறித்த பங்களிப்புப் பணத்தினை ஓய்வூதியத் திணைக்களத்தின் உள்ளூராட்சிப் பிரிவிடத்தே ஒழுங்கான முறையில் பாய்ச்சுவதற்குக் கருத்தாயிருத்தல் வேண்டும்.

2.2 சில உள்ளூராட்சி நிறுவனங்களினால் பட்டியலினை கோவையிட்டுக் கொள்ளல் மட்டும் நிறைவேற்றப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. மாதாந்தப் பட்டியலினை உடன் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், செழுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளையும் தவணைகளாகச் செழுத்தி முடிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (அவ் அவ் மாவட்ட அடிப்படையில் செழுத்த வேண்டிய நிலுவைப் பங்களிப்புப் பண அறிக்கையொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

2.3 ஒழுங்கான முறையில் பட்டியலினைச் செழுத்தாத உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் 1974 உள்ளூராட்சிச் சேவைகள் சட்டத்தின் 20 ஆம் ஒழுங்கு விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

கே.ஏ. திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பளர் நாயகம்.

பிரதிகள் :
01. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
02. செயலாளர் - நிதி அமைச்சு.
03. செயலாளர் - மாகாண சபைகள் அமைச்சு.
04. மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்.
05. உள்ளூராட்சி ஆணையாளர்கள்
06. உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள்.

| | மாவட்டம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | கண்டி | 143,730,195.20 |
| 2 | நுவரேலியா | 40,421,546.46 |
| 3 | முல்லைத்தீவு | 2,564,852.69 |
| 4 | கொழும்பு | 403,651,126.83 |
| 5 | காலி | 165,575,362.92 |
| 6 | கம்பஹா | 24,784,964.08 |
| 7 | அம்பாந்தோட்டை | 25,838,656.32 |
| 8 | மாத்தறை | 65,189,902.14 |
| 9 | பொலன்னறுவை | 2,074,962.08 |
| 10 | அம்பாரை | 15,471,927.60 |
| 11 | இரத்தினபுரி | 42,611,112.64 |
| 12 | கிளிநொச்சி | 1,563,752.04 |
| 13 | குருணாகலை | 112,067,423.89 |
| 14 | வவுனியா | 152,974.12 |
| 15 | யாழ்ப்பாணம் | 134,241,599.04 |
| 16 | கேகாலை | 4,429,131.87 |
| 17 | மொனராகலை | 6,582,881.71 |
| 18 | மட்டக்களப்பு | 34,550,536.46 |
| 19 | மன்னார் | 3,001,055.75 |
| 20 | திருகோணமலை | 12,852,212.61 |
| 21 | புத்தளம் | 37,158,145.67 |
| 22 | அநுராதபுரம் | 51,134,875.32 |
| 23 | களுத்துறை | 90,028,278.04 |
| 24 | பதுளை | 40,059,190.29 |
| 25 | மாத்தளை | 29,073,170.99 |